## Tamil Nadu Pollution Control Board

**Minutes of Public Hearing held on 19.12.2025 at 11:30 A.M at K.P.Logambal Mahal A/C, Virudhachalam Main Road, Kannarapettai, Cuddalore Taluk,Cuddalore District with respect to the unit of M/s.Chemplast Cuddalore Vinyls Limited, Cuddalore - Proposed expansion of existing Suspension Grade Poly Vinyl Chloride plant from 600 KTA to 1200 KTA with backward integration of the raw material Vinyl Chloride Monomer of 750 KTA capacity located at S.F.No. 70 Part, 71 Part, 72, 73, 74 Part, 75 Part, 76 Part, 133 Part & 134 and Associated Survey Numbers, Semmankuppam & Thiyagavalli Villages, Cuddalore Taluk, Cuddalore District, Tamil Nadu.**

**Details of participants in this meeting:**

1. Thiru. G. Punyakoti - District Revenue Officer, Cuddalore District.
2. Thiru. G. Ravichandran - District Environmental Engineer, TNPCB, Cuddalore District.
3. General Public and Government Officials – Copy of Attendance is enclosed.

*********

The public hearing was conducted to ascertain the views of the local public for the purpose of granting environmental clearance under the provisions of the Environmental Impact Assessment Notification, with respect to the unit of **M/s.Chemplast Cuddalore Vinyls Limited**, Cuddalore Taluk, Cuddalore District - **Proposed expansion of existing Suspension Grade Poly Vinyl Chloride plant from 600 KTA to 1200 KTA with backward integration of the raw material Vinyl Chloride Monomer of 750 KTA capacity located at S.F.No. 70 Part, 71 Part, 72, 73, 74 Part, 75 Part, 76 Part, 133 Part & 134 and Associated Survey Numbers, Semmankuppam & Thiyagavalli Villages, Cuddalore Taluk, Cuddalore District, Tamil Nadu.**

The public hearing was held at **K.P. Logambal Mahal A/C**, Kannarapettai, Virudhachalam Main Road, Cuddalore, and commenced at **11.30 A.M. on 19.12.2025**.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Cuddalore District:**

The District Environmental Engineer of the Tamil Nadu Pollution Control Board, Cuddalore, welcomed the Respected District Revenue Officer, Cuddalore District, the project consultants, other government officials, political leaders, social activists, volunteers, police personnel, media representatives, and members of the general public who attended the public hearing convened in connection with obtaining Environmental Clearance for the proposed project by M/s.Chemplast Cuddalore Vinyls Limited (CCVL), Cuddalore Taluk, Cuddalore District.

Based on the application submitted by the Project Proponent to the Ministry of Environment, Forest and Climate Change, the Ministry granted the Terms of Reference (ToR) with a directive to conduct a Public Hearing and submit the official proceedings to the Ministry.

Accordingly, with the approval of the District Collector, a public notice was issued for conducting the public hearing in respect of the proposed project of M/s.Chemplast Cuddalore Vinyls Limited (CCVL). The public notice announcing the conduct of the public hearing on 19.12.2025 at K.P. Logambal Mahal A/C was published on 15.11.2025 in the Tamil daily news paper "Dinamalar" and the English daily newspaper "The Indian Express". The Executive Summary and the draft Environmental Impact Assessment (Draft EIA) Report were made available at relevant government offices within the project proposed villages for public reference. Furthermore, the public hearing was intimated to the public of the surrounding villages through the distribution of pamphlets and audio announcements.

This public hearing is being conducted in connection with the projects of M/s.Chemplast Cuddalore Vinyls Limited, which include the upgradation of the existing marine terminal facilities and the expansion of the production capacity of the existing Suspension grade PVC (SPVC) manufacturing plant from 600 KTA to 1200 KTA, along with the establishment of a Vinyl Chloride Monomer (VCM) manufacturing unit with a capacity of 750 KTA as an associated raw material facility.

DEE further informed that, after a technical presentation delivered by the project consultant, the public would be invited to furnish their views and remarks on the proposed project. Participants were requested to state their name and village before expressing their views. Written representations could also be submitted. He also informed that video recording of the proceedings, along with all oral opinions and written submissions, would be forwarded to the Ministry of Environment, Forest and Climate Change for further action. The consultant was requested to provide a detailed explanation of the project.

DEE informed that the project consultants would explain the details of the proposed project to the public through a PowerPoint presentation. In accordance with the provisions of the Environment (Protection) Act, 1986, and the Environmental Impact Assessment Notification, 2006, the public hearing is being conducted as part of the process for obtaining Environmental Clearance. Thereafter, views and suggestions from the public and social activists would be received either orally or in writing, duly recorded, and forwarded to the Ministry of Environment, Forest and Climate Change.

Further, DEE requested the **District Revenue Officer**, who is chairing the meeting, to preside over the proceedings of the public hearing.

**District Revenue Officer, Cuddalore**

The District Revenue Officer, Cuddalore, welcomed all those present at the venue and stated that the meeting was convened to conduct the public hearing proposed by **M/s.Chemplast Cuddalore Vinyls Limited**, and that the consultant would now deliver a Power Point presentation on the scope of the project. The DRO has stated that views and suggestions from the public would be received one by one after completion of the technical presentation.

**Presentation by Mr.R.Sathish Kumar, General Manager, Environmental Department,M/s.Chemplast Cuddalore Vinyls Limited (CCVL), Chennai**

The GM has stated that the proposed project is required to meet future demand forecasts. The GM presented the layout of the existing facilities and the proposed

expansion plan. GM explained that the project components are interlinked and interdependent, as raw materials are imported through marine terminal facilities and connected to the production operations of the plant.

The GM delivered a presentation on the proposed project on behalf of **M/s.Chemplast Cuddalore Vinyls Limited** and elaborated on the project location, the necessity of the project, and the layout plans pertaining to the proposed upgradation.

The GM further explained that, in accordance with the procedures prescribed in the Office Memorandum dated **24.12.2010** issued by the Ministry of Environment, Forest and Climate Change, the proposed activities are considered integrated and interlinked.He also stated that the Environmental Impact Assessment (EIA) for the marine-related activities was carried out by a **NABET-accredited consultant, M/s.Indomer Coastal Hydraulics Private Limited**, and that the EIA for expansion of the SPVC plant and the VCM plant was carried out by another **NABET-accredited consultant, M/s.Perfact Enviro Solutions Private Limited**.

**<u>Technical Presentation by Thiru. G.Muthukumaran, M/s.Perfect Enviro solutions Private Limited, New Delhi :</u>**

The Project Consultant delivered a detailed technical presentation on the Proposed expansion of Suspension grade PVC plant from 600 KTA to 1200 KTA and & 50 KTA Vinly Chloro monomer (VCM ) as Backward Integration of M/s.Chemplast Cuddalore Vinyls Limited (CCVL).

*(Public raised slogans)*

*(Minor commotion)*

After completion of the project presentation, the District Revenue Officer and the District Environmental Engineer requested the participants to maintain calm and informed them that the views and suggestions of the public would be received thereafter.

*(Minor commotion)*

Then, the public began to express their views which are as follows:-

**Public Opinions:**

**1.Thiru. Pazha. Thamaraikannan, Pattali Makkal Katchi (PMK), Karaikadu**

He stated that people from surrounding villages had come to express their views. He pointed out that many industries had already been established in the area without seeking public opinion, whereas this company was attempting to obtain public views. He emphasized that it was the responsibility of the public to record their opinions and requested that unnecessary issues should not be created. He insisted that the police should remove persons causing disturbance during the meeting.He further emphasized that the views of the affected local people should be heard. He stated that after listening to public opinions, people could decide whether they wanted the project or not and requested everyone not to involve themselves in unnecessary conflicts.

He also mentioned that land acquisition through SIPCOT was already proposed and stated that he had attended the meeting without clearly knowing which project the public hearing related to. He stated that many people who had participated in protests opposing industries had lost their limbs and livelihoods. He clarified that they generally do not insist on the closure of industries.In this context, he stated that any industry which does not cause harm to the public or the environment and provides employment opportunities to local people would be welcomed. He clarified that the Pattali Makkal Katchi is not an anti-industry party. He stated that all opinions expressed by the public would reach both the State and Central Governments. Further, he stated that if a group of about ten persons raised slogans and another group countered them with opposing slogans, the public who had come from various places to express their views would be affected and unable to voice their opinions.

**2. Thiru. Muthukrishnan, Eachankadu.**

He requested the District Administration not to provoke disturbances and asked that the meeting be conducted for the purpose for which it was convened and then concluded. He also requested that people should not indulge in unnecessary fights among themselves.

Also, he requested everyone to remain seated, assured that an opportunity would be given to all to speak, and requested participants to confine themselves to expressing their opinions only. He also requested that personal disputes should not be brought into the meeting.

**3. Thiru. Gauthaman, Director, Thittakudi.**

He stated that being born in the land, he had faced many struggles and alleged that Neyveli had devastated Cuddalore District. He mentioned that SIPCOT was established in Cuddalore in 1971 and alleged that over the past 50 years, SIPCOT had destroyed the district. He questioned whether further expansion of **M/s.Chemplast Cuddalore Vinyls Limited** was required to destroy the land further.

He stated that anyone attempting to destroy the land should be opposed. He alleged that several political parties were speaking in support of the company after receiving money. He questioned why the District Collector was not present and why the public hearing was not chaired by him.

He also stated that the company was initially inaugurated by the then Hon'ble Deputy Chief Minister **Thiru. M.K. Stalin** and that the expansion approval was being granted by the present Hon'ble Chief Minister **Thiru. M.K. Stalin**. Hence, he alleged that the public hearing was not fair and requested that permission for expansion should not be granted.

**4. Thiru. Senthamarai Kannan, Eachankadu**

He stated that public issues should be resolved and requested that the public hearing should be conducted at the SIPCOT office or at the Tamil Nadu Pollution Control Board office. He stated that only people residing in the affected area would be able to express the impacts properly, and that persons coming from distant places would not be aware of the impacts. He mentioned that affected people reside beyond 5 km and that none of them had participated in the meeting and therefore termed the meeting meaningless. He questioned the purpose of conducting such a meeting.

He stated that neither the authorities nor the public had adequate clarity regarding the company's operations, the implications of the proposed project, the number of employment opportunities to be generated, or the benefits arising from such employment. He further remarked that neither the participants nor the authorities were fully aware of the reasons for raising slogans.

He repeatedly insisted that the meeting should be conducted at the SIPCOT office and stated that only 10% of the affected people had participated, while 90% were absent.

**5. Thiru. Venkatesan, Semmankuppam**

He stated that since **M/s.Chemplast Cuddalore Vinyls Limited** is in their area, many employment opportunities have been generated for local people and requested that the company should continue to be in the area.

**6. Thiru. Ramesh, Suthukulam**

He requested that the above-mentioned company should not be established in their area.

*(Minor commotion occurred)*

During the public hearing, a section of the public expressed support for the project, while another section opposed the same.

**District Revenue Officer, Cuddalore**

The District Revenue Officer, Cuddalore, informed that any other members of the public who wished to express their views could do so and that written petitions, if any, could be submitted during the meeting itself. He further informed that all views and representations recorded during the public hearing would be forwarded to the Ministry of Environment, Forest and Climate Change.

Finally, the District Revenue Officer expressed his gratitude to all those who participated in the meeting and declared that the public hearing was concluded.

Also, 303 petitions received from the public regarding this proposed project are attached herewith.

S. Ramaswamy 26/12/2025
District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Cuddalore.

26/12/25
District Revenue Officer,
Cuddalore District,
Cuddalore.

# தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம்

**கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், தி/ள். கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தற்போதுள்ள சஸ்பென்ஷன் கிரேடு பாலிவினைல் குளோரைடு ஆலையின் உற்பத்தி 600 KTA லிருந்து 1200 KTA விரிவாக்கம், பின்னோக்கிய மூலப்பொருள் ஒருங்கிணைப்பாக 750 KTA திறன் கொண்ட வினைல் குளோரைடு மோனோமர் உற்பத்தி நிறுவுதல், சர்வே எண்கள். 70 பகுதி, 71 பகுதி, 72, 73, 74 பகுதி, 75 பகுதி, 76 பகுதி, 133 பகுதி, 134 மற்றும் தொடர்புடைய சர்வே எண்கள், செம்மங்குப்பம் மற்றும் தியாகவள்ளி கிராமம், கடலூர் வட்டம், கடலூர் மாவட்டத்தில் அமைப்பது தொடர்பாக 19.12.2025 அன்று முற்பகல் 11.30 மணி அளவில் கடலூர், கண்ணாரப்பேட்டை, விருத்தாசலம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தி/ள்.K.P. லோகாம்பாள் மஹால் A/C - ல், நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை விபரங்கள்:**

இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம் :

1.திரு. கோ. புண்ணியகோட்டி – மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் மாவட்டம்.
2.திரு. கு. ரவிச்சந்திரன்– மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், த.மா.க வாரியம், கடலூர் மாவட்டம்.
3.பொது மக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் – வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

*************

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், தி/ள். கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தற்போதுள்ள சஸ்பென்ஷன் கிரேடு பாலிவினைல் குளோரைடு ஆலையின் உற்பத்தி 600 KTA லிருந்து 1200 KTA விரிவாக்கம், பின்னோக்கிய மூலப்பொருள் ஒருங்கிணைப்பாக 750 KTA திறன் கொண்ட வினைல் குளோரைடு மோனோமர் உற்பத்தி நிறுவுதல், சர்வே எண்கள். 70 பகுதி, 71 பகுதி, 72, 73, 74 பகுதி, 75 பகுதி, 76 பகுதி, 133 பகுதி, 134 மற்றும் தொடர்புடைய சர்வே எண்கள், செம்மங்குப்பம் மற்றும் தியாகவள்ளி கிராமங்கள், கடலூர் வட்டம், கடலூர் மாவட்டத்தில் அமைப்பதற்கான திட்டத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம், கடலூர், கண்ணாரப்பேட்டை, விருத்தாசலம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தி/ள். K.P. லோகாம்பாள் மஹால் A/C - ல், 19.12.2025 அன்று காலை 11.30 மணியளவில் துவங்கியது.

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கடலூர்</u>**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கடலூர் அவர்கள் கடலூர் மாவட்ட தி/ள்.கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முன்மொழியப்பட்டுள்ள திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் மாவட்டம் அவர்களையும், நிறுவனத்தின் திட்டங்கள் செயல்படுத்தும் தொழில் நுட்ப திட்ட ஆலோசகர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள், அரசியல் கட்சி தலைவர்கள், தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள், காவல்துறை, பத்திரிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக வரவேற்றார்.

மேற்கண்ட நிறுவனத்தின் முன்மொழியப்பட்டுள்ள திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக நிறுவனமானது மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திடம் விண்ணப்பித்ததன் அடிப்படையில், Terms of Reference (ToR) – வழங்கி, பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தி, கூட்ட நடவடிக்கையை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திடம் சமர்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள்.கெம்பிளாஸட் கடலூர் வினைல் லிமிடெட் நிறுவனத்தின் திட்டங்களுக்காக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் பொது அறிவிப்பானது K.P.லோகாம்பாள் மஹாலில் 19.12.2025 ஆகிய இன்று முற்பகல் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுவது தொடர்பாக 15.11.2025 நாளன்று தமிழ் நாளிதழ் "தினமலர்" மற்றும் ஆங்கில நாளிதழ் "தி இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆகிய செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது என்றும் மாவட்ட நிர்வாகம் மற்றும் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறவிருக்கும் கிராமத்தின் தொடர்புடைய அரசு அலுவலங்களுக்கு நிறுவனத்தின் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (Draft EIA Report) மற்றும் அறிக்கையின் திட்ட சுருக்கம் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேலும், துண்டு பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு கருத்து கேட்பு குறித்து அறிவிப்பு செய்யப்பட்டது என தெரிவித்தார்.

இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டமானது தி/ள்.கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல் லிமிடெட் நிறுவனத்தின் தற்போதுள்ள கடல் சார் முனைய வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள சஸ்பென்ஷன் கிரோடு பாலி வினைல் குளோரைடு ஆலையின் உற்பத்தி 600 KTA லிருந்து 1200 KTA ஆக விரிவாக்கம் பின்னோக்கிய மூலப்பொருள் ஒருங்கிணைப்பான 750 KTA திறன் கொண்ட வினைல் குளோரைடு மோனோமர் உற்பத்தி நிறுவுதல் ஆகிய திட்டங்களுக்காக

நடத்தப்படுகிறது. இந்த திட்டங்கள் குறித்து தொழில் நுட்ப திட்ட ஆலோசகர்கள் புள்ளி விளக்க காட்சி மூலம் உங்களுக்கு எடுத்துரைப்பார்கள். சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, 2006 – ன்படி சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட்டு பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களிடம் கருத்துக்களை எழுத்து மூலமாக மற்றும் வாய்வழி மூலமாக பெற்று, அதனை பதிவு செய்து மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியம். எனவே தொழில் நுட்ப திட்ட ஆலோசகர் திட்ட விளக்கத்தினை தெரிவித்த பின்னர், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு தங்களது கருத்துக்களை எழுத்து மூலமாகவோ வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்க வேண்டும் என்றும், இக்கூட்டத்திற்கு மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தலைமையேற்று நடத்தி தருமாறு கேட்டுக் கொண்டார்.

**<u>மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர்</u>**

மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் அவர்கள் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்து, தற்பொழுது தி/ள்.கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் இத்திட்டத்தை பற்றி விளக்கவுரையை அளிப்பார் எனவும், விளக்கவுரையை அளித்த பின்னர் பொதுமக்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

**<u>திரு. சு. சதீஷ் குமார், நிறுவன சுற்றுச்சூழல் துறை பொது மேலாளர், தி/ள் கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட், சென்னை</u>**

தி/ள் கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் சுற்றுச்சூழல் துறை பொது மேலாளர், திரு. சு. சதீஷ் குமார், தி/ள்.கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சார்பாக முன்மொழியப்பட்டுள்ள இந்த விரிவாக்கம் தொடர்பான விளக்க உரையை எடுத்துரைத்தார். மேலும், தற்போதைய திட்ட இடம், திட்டத்திற்கான தேவை, முன்மொழியப்பட்டுள்ள விரிவாக்கம் குறித்த வரைபடம் ஆகியவற்றை விவரித்தார். சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்ட அலுவலக குறிப்பாணை 24.12.2010 தேதியிட்ட நடைமுறைப்படி, இந்த விரிவாக்க திட்டங்கள் ஒருங்கிணைந்த மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ள திட்டமாக கருதப்படுகிறது. மேலும், கடல் சார்ந்த விரிவாக்கப் பணிகளின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை NABET அங்கீகரிக்கப்பட்ட ஆலோசகர், தி/ள். இந்தோமர் கோஸ்டல் ஹைட்ராலிக்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் PVC ஆலை விரிவாக்கம் மற்றும் VCM

ஆலை பணிகளின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை, NABET அங்கீகரிக்கப்பட்ட ஆலோசகர், தி/ள்.பெர்ஃபாக்ட் என்விரோ சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் விவரிப்பார்கள் என கூறினார்.

**<u>தொழில் நுட்ப விளக்கம் – திரு. க. முத்துக்குமரன், தி/ள். பெர்ட்ஃபாக்ட் என்விரோ சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், புது தில்லி</u>**

திட்ட ஆலோசகர் கடலூர் மாவட்டம், தி/ஸ்.கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முன்மொழியப்பட்டுள்ள தற்போதுள்ள சஸ்பென்ஷன்கிரேடு பாலிவினைல் குளோரைடு ஆலையின் உற்பத்தி 600 KTA லிருந்து 1200 KTA விரிவாக்கம், பின்னோக்கிய மூலப்பொருள் ஒருங்கிணைப்பாக 750 KTA திறன் கொண்ட வினைல் குளோரைடு மோனோமர் உற்பத்தி நிறுவுதல் தொடர்பான விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

கூட்டத்தில் சலசலப்பு

(கூட்டத்தில் கோஷமிட்டனர்)

திட்டத்திற்கான விளக்கவுரை முடிந்த பிறகு தங்களுடைய கருத்துகள் கேட்கப்படும், பொதுமக்கள் அமைதியாக இருக்கும்படி மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோர் கேட்டுக்கொண்டனர்.

கூட்டத்தில் சலசலப்பு

அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைக்கத் தொடங்கினார்கள். அவை பின்வருமாறு :-

**<u>1. திரு. பழ. தாமரைக்கண்ணன், பாட்டாளி மக்கள் கட்சி, காரைக்காடு.</u>**

இத்திட்டத்திற்கு கருத்து தெரிவிப்பதற்காக சுற்றியுள்ள கிராம பொதுமக்கள் வந்திருக்கிறார்கள். பொதுமக்களின் கருத்துகளை கேட்காமலேயே அதிகமான நிறுவனங்கள் இங்கு ஏற்கனவே அமைந்துள்ளன. ஆனால் இந்த நிறுவனமானது பொதுமக்கள் கருத்தை கேட்க முயலுகிறார்கள். எனவே நமது கருத்துக்களை பதிவு செய்ய வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது. தேவையில்லாமல் பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார். கூட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்துபவர்களை காவல் துறையினர் அப்புறப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மேலும் தங்கள் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை கேட்க வேண்டும் எனவும் வலியுறுத்தி பேசினார். பொதுமக்கள் கூறும் கருத்துக்களை கேட்டு

விட்டு, பின்னர் தாங்கள் திட்டம் வேண்டுமா? வேண்டாமா என முடிவு செய்து கொள்ளலாம் எனவும், தேவையில்லாமல் பிரச்சினைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஏற்கனவே சிப்காட் மூலம் நிலம் எடுக்கும் திட்டம் செயல்படுத்தபடவுள்ளது எனவும், தற்பொழுது நடக்கும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் எந்த திட்டம் தொடர்பானது என தெரியாமல்தான் தாம் இங்கு வந்துள்ளதாகவும், ஏற்கனவே இங்கு நிறுவனங்கள் அமையக் கூடாது என பல போரட்டங்களில் கலந்து கொண்ட பொதுமக்கள் கை கால்களை இழந்து, வாழ்வாதாரத்தை இழந்து இருக்கிறார்கள். பொதுவாக நாங்கள் எந்த தொழிற்சாலையையும் மூட சொல்லி வலியுறுத்துவது கிடையாது. இந்த சூழலில் பொதுமக்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படுத்தாமல், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரும் எந்த நிறுவனமும், பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் எந்தவித சீர்கேடும் ஏற்படுத்தாமல் செயல்படும் எந்த நிறுவனம் அமைந்தாலும் தாங்கள் வரவேற்பதாக தெரிவித்தார். மேலும் தாம் சார்ந்துள்ள பாட்டாளி மக்கள் கட்சியானது தொழிற்சாலைகளுக்கு விரோதமான கட்சி இல்லை எனவும் தெரிவித்தார். எனவே பொதுமக்களாகிய நாம் சொல்லுகின்ற ஒவ்வொரு கருத்துக்களும் மாநில மற்றும் மத்திய அரசாங்கத்தை சென்றடையும் எனவும் தெரிவித்தார். அதை விடுத்து ஒரு 10 நபர்கள் சேர்ந்து கொண்டு கோஷம் போடுவது, அந்தக் கோஷத்திற்கு எதிர்த்து 10 பேர்கள் கோஷம் போடுவது என இருந்தால், கருத்து தெரிவிக்க அனைத்து பகுதியில் இருந்து வந்திருக்கும் பொதுமக்கள் தமது கருத்துக்களை கூற இயலாமல் பாதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

**2. திரு. முத்துக்கிருஷ்ணன், ஈச்சங்காடு**

மாவட்ட நிர்வாகம் தயவு செய்து இங்கு கலவரத்தை தூண்ட வேண்டாம் எனவும், மாவட்ட நிர்வாகம் எதற்காக இந்தக் கூட்டத்தை நடத்துகின்றார்களோ அதை நடத்தி விட்டு செல்லுங்கள். தேவையில்லாமல் ஒருவருக்கு ஒருவர் சண்டை ஏற்படுத்தி விட்டு செல்ல வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், அவர் தயவு செய்து அவரவர்கள் இருக்கையில் அமருமாறும், அனைவருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும் எனவும், கருத்துகளை மட்டும் கூறுமாறும் தங்களுக்குள் உள்ள பகையை தீர்த்துக் கொள்வதற்காக இந்த இடத்திற்கு வர வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

**3. திரு. கௌதமன், இயக்குநர், திட்டக்குடி**

இந்த மண்ணில் பிறந்து தான், தாம் நிறைய போராட்டங்களை சந்தித்து உள்ளதாகவும், கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி என்கின்ற எமன் கடலூர் மாவட்டத்தை அழித்து விட்டதாகவும், 1971 ம் ஆண்டு சிப்காட் தொழிற்சாலை வளாகம் கடலூரில் அமையப்பெற்றதாகவும், கடந்த 50 ஆண்டு

காலத்தில் சிப்காட் கடலூரையே அழித்து விட்டதாகவும் தெரிவித்தார். எனவே இந்த அமையவுள்ள தி/ள். கெம்பிளாஸ்ட் நிறுவனம் இந்த மண்ணை அழிப்பதற்கு மேலும் விரிவாக்கம் வேண்டுமா? என வினவினார். எனவே இந்த மண்ணை அழிப்பதற்கு யார் முயற்சி செய்தாலும் அவர்களுக்கு எதிராக யுத்தம் செய்ய வேண்டும் எனவும் பேசினார். பல கட்சிகள் மேற்படி நிறுவனத்திடம் பணம் பெற்றுக்கொண்டு ஆதரவாக பேசி வருகிறார்கள் எனவும் தெரிவித்தார். இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தை தலைமையேற்று நடத்தாமல் மாவட்ட ஆட்சியர் எங்கு சென்றார். ஏன் அவர் வரவில்லை எனவும் பேசினார். இந்த நிறுவனத்தை முதன் முதலாக திறந்து வைத்தவர் அன்றைய மாண்புமிகு துணை முதல்வர் திரு. ஸ்டாலின் அவர்கள் என்றும் விரிவாக்கத்திற்கான அனுமதி வழங்குவதும் மாண்புமிகு முதல்வர் திரு. ஸ்டாலின் அவர்கள் என்றும் பேசினார். எனவே இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டம் நேர்மையற்றது எனவும், எனவே மேற்படி நிறுவனத்திற்கு விரிவாக்கத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது எனவும் கேட்டுக்கொண்டார்.

**4. திரு. செந்தாமரைக்கண்ணன், ஈச்சங்காடு**

மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் எனவும், இந்தக் கூட்டத்தை சிப்காட் நிறுவனம் அமைந்துள்ள அலுவலகத்தில் நடத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகத்தில் வைத்தும் நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். எனவே பாதிக்கப்படும் இடத்தில் அமைந்துள்ள பொதுமக்கள் பேசினால் தான் பாதிப்பு பற்றி அவர்களால் தெரிவிக்க இயலும் எனவும் கூறினார். எனவே தூரத்தில் இருந்து வந்து கருத்து சொல்லும் யாருக்கும் பாதிப்புகள் குறித்து தெரியாது. எனவே பாதிப்பு குறித்து தெரிவிப்பதற்காக சிப்காட் அலுவலகத்தில் வைத்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தை நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். பாதிக்கப்பட்டவர்கள் 5 கி.மீ தூரத்திற்கு அப்பால் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் யாரும் வரவில்லை எனவும், எனவே இது அர்த்தமில்லாத கூட்டம் எனவும், அர்த்தமில்லாத கூட்டம் நடத்தி என்ன பயன் எனவும் பேசினார். விரிவாக்கம் என்பது ஒரு பதிவான வேலை, அதனால் பல ஆயிரம் பொதுமக்களுக்கு வேலை கிடைக்கும், வேலையினால் எத்தனை நபர்கள் நலன் அடைவார்கள் என்பதும் உங்களுக்கு தெரியாது எனவும் தெரிவித்தார். எனவே எதற்காக நாம் வந்துள்ளோம் ஏன் சத்தம் இட்டுக்கொள்கிறோம் என்பதும் உங்களுக்கும் தெரியாது, எங்களுக்கும் தெரியாது எனவும் தெரிவித்தார். எனவே இந்தக் கூட்டத்தை சிப்காட் அலுவலகத்தில் வைத்து தான் நடத்த வேண்டும் என மீண்டும் கேட்டுக்கொண்டார். மேலும் பாதிக்கப்பட்ட மக்களில் 10 சதவீதம் தான் இங்கு கலந்து கொண்டு உள்ளதாகவும், இன்னும் 90 சதவீதம் இங்கு வரவில்லை எனவும் தெரிவித்து பேச்சை முடித்துக்கொண்டார்.

**5. திரு. வெங்கடேஷன், செம்மங்குப்பம்**

மேற்படி நிறுவனமான தி/ள். கெம்பிளாஸ்ட் நிறுவனம் எங்கள் பகுதியில் அமைந்துள்ள காரணத்தினால், இங்குள்ள மக்களுக்கு நிறைய வேலை வாய்ப்புகள் ஏற்பட்டு உள்ளதாகவும், எனவே மேற்படி நிறுவனம் எங்கள் பகுதியில் அமைய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**6. திரு. ரமேஷ், சுத்துகுளம்**

எங்கள் பகுதியில் மேற்படி நிறுவனம் அமையவே கூடாது என கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் சலசலப்பு

பொதுமக்களில் ஒரு பிரிவினர் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் இன்னொரு பிரிவினர் எதிர்த்தும் குரலெழுப்பினர்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் அவர்கள் வேறு பொதுமக்கள் யாரேனும் கருத்துகள் கூற விரும்பினால் கூறலாம் என தெரிவித்து, எழுத்துப் பூர்வமான மனுக்கள் ஏதேனும் அளிப்பதாக இருந்தால், இக்கூட்டத்தில் அளிக்கலாம் என கூறினார். கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கருத்துகள் அனைத்தும் மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்து கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறியவுடன், பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் இத்துடன் நிறைவு பெற்றது என தெரிவித்துக்கொண்டார்.

மேலும் இத்திட்டம் தொடர்பாக பொதுமக்கள் அளித்துள்ள 303 மனுக்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இ. ரவிச்சந்திரன் 26.12.2025
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கடலூர்.

26/12/25
மாவட்ட வருவாய் அலுவலர்,
கடலூர் மாவட்டம்,
கடலூர்.